# மிதிவெடிகள்

முடமாக்கவோ, மரணத்திற்கோ
காரணமாகலாம்.

**நீங்கள் மேற்கொள்ளும்
தற்பாதுகாப்பு**

உங்களுக்கு ஏற்படக்கூடிய
அங்கவீனத்தையோ
மரணத்தையோ
தடுக்கும்.




ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்

unicef

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *மிதிவெடிகள் எங்கே இருக்கும்?*

போர் நடந்த அல்லது இராணுவம், போராளிகள் தங்கியிருந்த இடங்களில் எல்லாம் இருக்கலாம்.

எனினும் பொரும்பாலும் இருக்கும் இடங்கள்

- கைவிடப்பட்ட
  - பாதுகாப்பு அரண்கள்
  - பதுங்கு குழிகள்
  - இராணுவ முகாம்கள்
  - பாதுகாப்பு அணை
- தென்னை, எலுமிச்சை, மா போன்ற மரங்களின் கீழ்
- வீதி ஓரங்களில்
- கிணற்றடியில்
- வீட்டு வாசல்களில்

## *மிதி வெடிகளிலிருந்து பாதுகாப்பது எப்படி?*

நீங்கள் இடம்பெயர்ந்த பின்னர், முதன்முறையாக உங்கள் சொந்த இடங்களிற்கு திரும்பும் பொழுது

- குழந்தைகளை கொண்டு செல்லாதீர்கள்
- முன்னர் யாராவது பாவித்திருந்த பாதையில் நடந்து செல்லுங்கள்
- ஒவ்வொரு அடியையும் அவதானமாக எடுத்து வையுங்கள்
- எக்காரணத்திற்காகவும் குறுக்கு வழிகளை பாவிக்காதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் காணிக்குள் செல்லும்போது

- அவசரப்பட்டு செல்லாதீர்கள்
- ஒவ்வொரு அடி வைக்கும்பொழுதும் பார்த்து அவதானமாக வையுங்கள்.
- உங்கள் வீட்டை மிதிவெடிகளுக்கும் மற்றும் வெடிக்கும் உபகரணங்களுக்காகவும் அங்குலம் அங்குலமாக பரிசோதித்துப் பாருங்கள்.
- அதேபோல் உங்கள் காணியையும் அங்குலம் அங்குலமாக பரிசோதித்துப் பாருங்கள்.

## உங்கள் வீட்டில் குடியமர்ந்த பின்

- பிள்ளைகளுக்கு மிதிவெடித் தடுப்பு முறைகளைப் பற்றி தெளிவாகச் சொல்லிக் கொடுங்கள். குழந்தைகள் இயற்கையாகவே எதையும் ஆராயும் தன்மையுள்ளவர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.
- கைவிடப்பட்ட பாதுகாப்பு அரண்களுக்கு அண்மையில் விளையாட அனுமதியாதீர்கள்.
- வித்தியாசமான அல்லது முன்னர் காணாத எதையும் கண்டால், அதைத் தொடாது உங்களுக்குத் தெரிவிக்கும்படி குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் அறிவுரை வழங்குங்கள்.
- முன்னர் காணாத எதையும் கண்டால் ஆராய வேண்டாம் என குழந்தைகளுக்கு சொல்லி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மிதிவெடியினால் காயம் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?***

- பெரும்பாலும் காலில் தான் காயம் உண்டாகும். சிதறும் துண்டுகளால் உடலின் வேறு பகுதிகளிலும் காயம் ஏற்படலாம்.

- குருதிப் பெருக்கிருந்தால் காயங்களுக்கு மேல் இறுகக்கட்டு போடவேண்டும். அவசியமானால் இடுக்கு வைத்து குருதிப்பெருக்கு நிற்கும்வரை இறுக்க வேண்டும். வைத்தியசாலையை அடைய அரை மணித்தியாலத்திற்கு மேலாகுமானால், அரை மணித்தியாலத்திற்கு ஒரு முறை கட்டைத்தளர்த்தி விட வேண்டும்.

- காயத்தை துணியால் மூடி, தூசு படாது கட்டி உயர்த்தி வைக்க வேண்டும்.

- உடனே வைத்திய சாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிதிவெடிகளைக் கண்டால் என்ன செய்யவேண்டும்?

1. தொடாதீர்கள்



2. இடத்தை அடையாளமிடுங்கள்



3. வந்த வழியே செல்லுங்கள்



4. அருகில் உள்ள இராணுவ முகாமிற்கு தகவல் சொல்லுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மிதிவெடிகள் என்றால் என்ன?***

பகுதியாகவோ, முழுமையாகவோ, நிலத்தில் புதைக்கப்பட்டு, மிதிக்கும்பொழுது வெடிக்கும் உபகரணம் மிதிவெடியாகும்.




மிதிவெடி



ஜொனி வெடி

இவை இராணுவத்தினராலும், போராளிகளினாலும் தங்கள் எதிரிகளை முடமாக்குவதற்காக புதைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை உங்களையும் பாதிக்கலாம்.

மிதிவெடிகள் தவிர்ந்த வேறு வெடிக்கும் உபகரணங்களுள் கீழ்க்கண்டவை அடங்கும். இவை போர் நடைபெற்ற இடங்களில் காணப்படும். இவற்றைக் கையில் எடுத்துக் கையாளும் போது வெடிக்கக் கூடும்.

**கைக்குண்டு**



**மோட்டார் எறிகணை**



**ஆட்டிலறி எறிகணை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org